தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்

# நவாலித் திருச்சபை

ஞாயிறு பாடசாலை

# சிறுவர் பாமாலை







"கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி
நம்முடைய இரட்சணியக் கன்மலையைச்
சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம்
வாருங்கள்."

சங். 95 : 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Faith and Comfort

1. Blessed are the ... - Matthew 5 : 10

2. I have fought the good fight, I have finished the ... kept the faith - II Timothy 4 : 7

3. For me to live is Christ, and to die is gain - Philip...

4. Our homeland is in heaven - Philippians 3 : 20

5. Death is swallowed up in victory - I Corinthians ...

6. I shall dwell in the house of the Lord forever - Psal...

7. Blessed is the man, who trusts in Thee - Psalm 8...

8. The will of the Lord be done - Acts 21 : 14

9. O Lord my God, I will give thanks to thee for ... Psalm 30:12

10. Give thanks to the Lord, for he is good - Psalm 1...

11. I will praise the Lord as long as I live - Psalm 146

12. My Grace is sufficient for you - II Corinthians ...

13. Lo, I am with you always, to the close of the age ... 28:20

Printed by: Kalaimagal Computer Printers (Obno... Jaffna), Ramanathan Road, Thirunelvely

CHURCH OF THE J. D. C. S. F.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய திருச்சபை - யாழ். பேராயம்


## நவாலித் திருச்சபை

### ஞாயிறு பாடசாலை

# சிறுவர் பாமாலை







"கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி
நம்முடைய இரட்சணியக் கன்மலையைச்
சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம்
வாருங்கள்."

சங். 95 : 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN LOVING MEMORY
# OF
# YESUSAGAYAM ARULANANTHAM

BORN : ................... $8^{TH}$ JULY, 1928

CALLED TO GLORY : ..... $25^{TH}$ SEPTEMBER 1996

" MY TIMES ARE IN THY HAND."

Psalm. 31:15

Thanks giving gift by his family members



## CHRISTMAS - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

இறைவழிபாடு எப்போதுமே பாடல்களுடன் ஒன்றிணைந்துள்ளது. மெய்யடியார்கள் காலந்தோறும் இறைவனைத் துதித்துப் போற்றவும், தம் நம்பிக்கைகளை வெளிப்படுத்தவும், தமது மன்றாட்டுகளை இறைவனிடம் ஏறெடுக்கவும் பாடல்களைப் பயன்படுத்தியுள்ளனர். கிறிஸ்தவ திருச்சபையிலும் அன்று தொட்டு இன்றுவரை பாடல்களும், இசையும் முக்கிய இடம் பெற்றுள்ளன.

இன்று கிறிஸ்தவ திருச்சபைக்குள் புதிய பாடல் அமைப்புக்களும், மெட்டுக்களும் கொண்ட பாடல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இதனால் பழைய கருத்துச்செறிவு கொண்ட பாடல்கள் எமது இளைய சந்ததியாரால் மறக்கப்படுகின்றன.

எனவே பழைய பாடல்களையும், எமது ஞாயிறு பாடசாலை மாணவரின் மனதில் பதிய வைக்கவும் அவற்றைப் பாடுவதை உறுதிப்படுத்தவும் உதவியாக இந்த சிறிய சிறுவர் பாமாலை நவாலி தென்னிந்திய திருச்சபை ஞாயிறு பாடசாலையினரால் வெளியிடப்படுகிறது.

இப்பாமாலையை இத்திருச்சபையைச் சேர்ந்த காலம்சென்ற திருவாளர் இயேசுசகாயம் அருளானந்தம் அவர்கள் நினைவாக அழகுற கணனிப் பதிப்புச் செய்து எமக்கு அன்பளிப்புச் செய்த அன்னாரின் குடும்பத்தினருக்கு ஞாயிறு பாடசாலையினரின் இதய பூர்வமான நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் உங்கள் இருதயங்களில் நன்றியறிதலோடு கடவுளைப் போற்றிப் பாடுங்கள்." கொலோ 3 : 16

அருள்திரு. V. இராஜ்குமார்
சபைக்குரு
*நவாலித் திருச்சபை*

குரு இல்லம்
*இறைவருகையின் காலம் - 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


## † இறைவழிபாடு

| | |
|---|---|
| துதி சாற்றல் | 1 - 5 |
| கர்த்தருடைய செபம் | 6 |
| மங்களம் | 7 |

## † கடவுள் மகன்

| | |
|---|---|
| பிறப்பு | 8 - 11 |
| வாழ்க்கை | 12 |
| அன்பு | 13 |
| பவனி | 14 - 16 |
| திருப்பாடுகள் | 17 - 19 |
| உயிர்த்தெழுதல் | 20 - 23 |

## † கிறிஸ்தவ வாழ்க்கை

| | |
|---|---|
| நம்பிக்கை | 24 - 26 |
| செபம் | 27 |
| திருமறை | 28 |
| கொடை | 29 - 30 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்களின் முதலடி அகராதி


| | பாடல் இல. |
|---|---|
| அல்லேலூயா கர்த்தரையே | 1 |
| ஆத்துமமே என் முழு உள்ளமே | 2 |
| ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே | 3 |
| இயேசு என்ற திருநாமத்திற்கு | 4 |
| இயேசு என்றதுமே | 12 |
| இயேசு கற்பித்தார் | 32 |
| இன்று கிறிஸ்து எழுந்தார் | 23 |
| இராக்காலம் பெத்லேகேம் | 8 |
| இராசன் தாவீ தூரிலுள்ள | 9 |
| இயேசு நாதர் வேந்தனாக | 14 |
| இயேசு நேசிக்கிறார் | 13 |
| உடைபட்ட மலையே | 18 |
| உன்னதங்களில் மகிமையே | 7 |
| எந்தக் காலத்திலும் | 5 |
| எல்லாம் இயேசுவே | 25 |
| என் ஆத்தும நேச மேய்ப்பரே | 27 |
| ஓசன்னாப் பாடுவோம் | 15 |
| கர்த்தர் என் மேய்ப்பராய் | 24 |
| கர்த்தாதி கர்த்தர் உயிர்த்தான் | 22 |
| காக்கும் கரங்கள் | 26 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கீதம் கீதம் ஜெய ஜெய கீதம் | 21 |
| செய் என்று சிற்றாறு | 29 |
| தர்மக் காசைப் பாரும் | 30 |
| துள்ளித்துள்ளிப் பாலனே | 33 |
| தூதர் வான சேனை பாடும் | 20 |
| பரமண்டலங்களில் வீற்றிருக்கும் | 6 |
| பரன்மகன் பாரினிலே | 10 |
| பவனி செல்கின்றார் இராயா | 16 |
| பாரில் மாந்தர்க்காக | 11 |
| பாரீர் ! கெத்சமனே | 17 |
| பாலர் பாடும் போது | 31 |
| பால்ய வீரர் | 34 |
| வருத்தப்படுவோர்க்கும் | 19 |
| வானபிதா தந்த வேதத்திலே | 28 |
| வீரதீரமாய் | 35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.

## 29 ஜன்னியம் (சங்கீதம் 148) ஏகதாளம்

1. அல்லேலூயா, கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்,
அவர் நடத்தும் செயல்கள் எல்லாம் பார்த்தோரே
துதியுங்கள்,
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்.

பல்லவி : இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்;
அல்லேலூயா, அல்லேலூயா,
தேவனைத் துதியுங்கள்.




2. தம்புரோடும், வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்,
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்;
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்,
எக்காலமும் மாறாதவர், இயேசுவைத் துதியுங்கள்.

3. சூரியனே, சந்திரனே, தேவனைத் துதியுங்கள்,
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்;
அக்கினியே, கல்மழையே, படைத்தோரைத் துதியுங்கள்,
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்.

4. பிள்ளைகளே, வாலிபரே, தேவனைத் துதியுங்கள்,
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்;
பெரியவரே, பிரபுக்களே, தேவனைத் துதியுங்கள்,
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்.

5. ஆழ்கடலே, சமுத்திரமே, தேவனைத் துதியுங்கள்,
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்;
தூதர்களே, முன்னோடிகளே, தேவனைத் துதியுங்கள்,
பரலோகத்தை மீட்கப்பட்டோர் நிரப்புவார் துதியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.

**இந்துஸ்தான் காபி** **ஏகதாளம்**

**பல்லவி**

ஆத்துமமே! என் முழு உள்ளமே - உன்
ஆண்டவரைத் தொழுதேத்து - என்றுமுன் மேல்
அன்பு வைத்தாதரித்த உன்
ஆண்டவரைத்தொழுதேத்து.



**சரணங்கள்**

1. போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள - ஆத்துமமே

2. தலைமுறை தலைமுறை தாங்கும் வினோத
உலகமுன் தோன்றி ஒழியாத - ஆத்துமமே
3. தினம் தினம் உலகில் நீ செய் பலதுரோக
வினை பொறுத்தருளும் மேலான - ஆத்துமமே

4. வாதை பிணி துன்பம் மாற்றி அனந்த
உதவி செய்துனக்கே உயிர்தந்த - ஆத்துமமே

5. உற்றுனக்கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றுங் கிருபையினால் முடிசூட்டும் - ஆத்துமமே

## 3.

**சங்கராபரணம்** **ஆதிதாளம்**



1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே;
அருமையாய் இயேசு நமக்களித்த
அள்வில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின சீவியத்தில். - ஆத்துமமே

பல்லவி : ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி,
பொங்கிடுதே என்னுள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணி போலெமைக் காத்தாரே;
கவலைகள் தீர்த்துக் கண்ணீர் துடைப்பார்;
கருத்துடன் பாடிடுவாய். - ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினாலும்,
கடும்புயல் அடித்துக் கவிழ்த்தினாலும்,
கடலையும் காற்றையும் அமர்த்தி எமைக்
காப்பாரே, அல்லேலூயா. - ஆத்துமமே

4. பரிசுத்த வான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே;
விழிப்புடன் கூடித் தரித்திடுவோம்,
விரைந்தவர் வந்திடுவார். - ஆத்துமமே



## 4.

சங்கராபரணம்

பல்லவி

இயேசு என்ற திரு நாமத்திற்கு
எப்போதுமே மிகத் தோத்திரம்.

சரணங்கள்

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது. - இயேசு

2. வேதாளம் பாதாளம் யாவையும் செயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே. - இயேசு



3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது. - இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது. - இயேசு




5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடை முற்றும் அகற்றிடும் நாமமது. - இயேசு

## 5.

**அரிஹாம்போதி** **ஏகதாளம்**

### பல்லவி

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்,
இயேசுவே உம்மை நான் துதிப்பேன், துதிப்பேன்,
எந்த வேளையிலும் துதிப்பேன்.



### சரணங்கள்

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே - எந்த

2. தாய் தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே - எந்த

3. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே - எந்த

4. ஞான வைத்தியராம் ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் - என் நண்பரும் நீரே - எந்த

5. மீட்பரும் நீரே - மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே - என் மகிமையும் நீரே - எந்த

3. தேவனும் நீரே - ஜீவனும் நீரே
இராஜனும் நீரே - என் சர்வமும் நீரே - எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.

## கர்த்தருடைய செபம்

நாதநாமக்கிரிய ஆதிதாளம்

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரம பிதாவே எந்நாளும்
பரிசுத்தப்படுக உம் நாமம்;
பரிவுடன் வருக உம் இராச்சியம்;
ப்ரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப்படுவதுபோல்
தரணியிலுமது சித்தமுமே
தவறாது செய்யப்படுக சதா;
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக் கீந்தருளும்;
நன்றயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன்னயம் போல் எம்பிழை மன்னியும்
தேவே, சோதனைக் கெமை விலக்கி
தீமையினின் றெமை இரட்சியுமே;
மேவும் இராச்சியம் வல்லமை மகிமை
மிகவும் உமதென்றுமே, ஆமென்.



7.

## The Angels' song

1. உன்னதங்களில் மகிமையே
உயர்ந்த பரா பரனுக்கே
மண் மேற் சமாதானமே
மனிதர் பேரில் பிரியமே.

2. மாண்ட ஆட்டுக்குட்டிக்கு
வல்லமை, வாழ்வு நல்லபலன்
வேண்டும் ஞான தோத்திரம்
மிகக் கனமுண்டாகவே.



3. கர்த்தர் சேனை கர்த்தரே,
சுத்தர், சுத்தர், பரிசுத்தர்!
முற்று மிந்தப் பூமியை
மூடும் அவரின் மிகிமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.

## While shepherds watched their flocks by night

Winchester old C.M


1. இராக்காலம் பெத்தலேம் மேய்பார்கள்
தம் மந்தை காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க,
விண் சோதி கண்டனர்.



2. அவர்கள் அச்சம் கொள்ளவும்
விண் தூதன், "திகில் ஏன் ?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்.

3. "தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய்க்கிறிஸ்து. நாதனார்
பூலோகத்தார்க்கு இரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்.

4. இதுங்கள் அடையாளமாம்;
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்."




5. என்றுரைத்தான்; அக்கணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. Once in royal David's City


Irby 8, 7, 8, 7, 7, 7

1. இராசன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே,
மாதா சாந்த மரியாள் தான்;
பாலன், இயேசுக் கிறிஸ்து தான்.



2. வானம் விட்டுப் பூமிவந்தார்
மகா தேவ தேவனே;
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்,
தொட்டிலோ முன்னணையோ !
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்.

3. ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;
பாலிய பருவம் எல்லாம் அன்பாய்
பெற்றோர்க்கு அடங்கினார்.
அவர் போல் கீழ்ப்படிவோம்,
சாந்தத்தோடு நடப்போம்.



4. பாலர்க்கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தர் போல
துன்பம், துக்கம் சகித்தார்,
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்.

5. நம்மை மீட்ட நேசர் தம்மை
கண்ணால் கண்டு களிப்போம்;
அவர் தாமே மோட்ச உலக
நாதர் என்று அறிவோம்.
பாலரை அன்பாகவே
தம்மிடத்தில் சேர்ப்பாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.

சங்கராபரணம் ரூபகம்

பல்லவி


பரன்மகன் பாரினிலே பாலகனாய் உதித்தார்,
வாரும் நன்னாளிதிலே பாடிப்பணிந்து
அஞ்சலி செய்திடுவோம்

1. பாவத்தில் மாளும் பாவியைக் காக்க
பாரினிலே தெய்வம் மனுவானாரே;
விண்ணவர் வானில் பாடுகின்றாரே
அண்ணலைத் துதித்து வாழ்த்துகின்றாரே - பரன்மகன்

2. ஆயரும் தேடிப்பணிந்து கொண்டாரே
ஞானியரும் இன்பம் கொண்டாடுறாரே;
மூவுல காளும் மாதவன் அன்பை
பூவுலகோரே நீர் பாடுவோம் வாரும் - பரன்மகன்

3. சந்தேகம் வேண்டாம் வந்து நீர் பாரும்
சொந்தம் போலெம்மைத் தேடி வந்தாரே;
மந்தைக் குடிலும் கந்தை உடையும்
விந்தை இதனை நீர் சிந்தித்து பாரும். - பரன்மகன்

4. கல்வி அறிவும் செல்வச் சிறப்பும்
பொல்லாப் பாவப்பேயை வெல்லுமோ சொல்லும்;
புல்லணைமீது பாலனாய் வந்த
நல்லநாதர் இயேசு செய்தாரே பாடும். - பரன்மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11.

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

பாரில் மாந்தர்க்காகத் தேவன் பாலனாயினார்; - உயர்
பரம சேனை இராகம்பாடி பரவியேத்தினார்.



சரணங்கள்

1. பொன்னுலகும் இந்நிலமும் புரக்கும் வல்லவன் - புவி
முன்னணையிற் புல்லணையுற முழங்கி யார்த்தனர் -
பாரில்.

2. உன்னதத்திற் தேவன் மீதி லுறமகிமையும் - இந்த
மண்ணிற் சமாதானம், மனுமேல் மகிழ்ச்சி யென்றனர் -
பாரில்.

3. காபிரியேல் மீகாவேல் சேரக் கனத்த தூதுவர் - அங்கே
காட்சி காணுமிடையர் முன்பு களித்தே ஆடினர் - பாரில்.

4. மண்டலத்தோர் மகிழ்ச்சி கூர மன்னுநற் செய்தி - இன்று
மன்னன் தாவீது மகவாய்க் கிறிஸ்து வந்தாரென்றனர் -
பாரில்.

## 12.

இராகம்: தோடி தாளம்: ரூபகம்

பல்லவி

இயேசு என்றதுமே எனக்கோர்
இன்பம் பிறக்குதம்மா;
காசினியி லவர்போல் எவரையும்
கண்டதில்லையம்மா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சரணங்கள்

1. பேசத் தொடங்கினாலோ பேச்செல்லாம்
பேரின்பம் சொட்டுதம்மா;
பார்க்கத் தொடங்கினாலோ பார்வை எல்லாம்
பாவியின் மேலேயம்மா ! - இயேசு

2. குஷ்டரோகியவனைக் கையினால்
கூசாமல் தொட்டாரம்மா;
கஷ்டப்படுவோரைக் கண்டதும்
கண்ணீர் வடித்தாரம்மா ! - இயேசு

3. சிலுவை மீதினிலே இரத்தத்தைச்
சிந்தி மரித்தாரம்மா;
உலகை மீட்டிடவே ஆண்டவர்
அன்புடன் மாண்டாரம்மா ! - இயேசு

4. கல்லறை விட்டெழுந்தே உலகில்
காட்சியளித்தாரம்மா;
வல்ல சுத்தாவியினைத் தரவே
வானில் எழுந்தாரம்மா! - இயேசு



## 13.

சங்கராபரணம் ஏகதாளம்

பல்லவி

இயேசு நேசிக்கிறார், - இயேசு நேசிக்கிறார்;
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்னமாதவமோ



சரணங்கள்

1. நீசனாமெனைத்தான் இயேசு நேசிக்கிறார்;
மாசில்லாத பரன் சுதன் தன் முழு மனதால் நேசிக்கிறார்.
- இயேசு

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிறாரென நவில லாச்சரியம்.
- இயேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வேதத் தாச்சரியம் வெகுவாய்த் தோன்றுகிலும்
நாதன் இயேசென்னை நேசித்த செய்தி யெந்நாளுமாச்சரியம்.
-இயேசு

4. நாதனை மறந்து நாட்கழித்துலைந்தும்
நீதன் இயேசென்னை நேசிக்கிறாரெனல் நித்தமாச்சரியம்.
- இயேசு

5. ஆசை இயேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்,
அதை நினைந்தவ ரன்பின் கரத்துள்ளளே ஆவலாய்ப்
பறப்பேன். -இயேசு

6. இராசன் இயேசுவின் மேல் இன்ப கீதஞ் சொலில்
ஈசன் இயேசென்னைத் தான் நேசித்தாரென்ற இணையிற் கீதஞ்
சொல்வேன், - இயேசு

## 14.



1. இயேசு நாதர் வேந்தனாக எருசலைக் கேகினாரே
ஈசனுடை சித்தப்படி இங்கிதமாய்த் தோன்றினாரே.

பல்லவி: ஓசன்னாப் பாடுவோம் இயேசு இராயர்க்கே
ஓசன்னாப் பாடுவோம் உன்னதனுக்கே.

2. குருத்தோலைகள் பிடித்து கும்பு கும்பாக நடித்து
பெருத்த தொனியாகவே பொற்பாதனைப் போற்றவே.
- ஓசன்னா


3. வேதபாரகர் மயங்கப் பாதகர் எல்லாம் கலங்க
தேவ தூதர்கள் மகிழத் தேவாலயம் இலங்கவே.
- ஓசன்னா.

4. பாலகரெல்லாரும் கூடிப் பண்புடன் இயேசுவைப் போற்ற
ஞாலமீதிற் தேவனது ஞானத்தை வெளிப்படுத்தி.
- ஓசன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15.

**சங்கராபரணம்** **ஆதிதாளம்**



**பல்லவி**

ஓசன்னா பாடுவோம், இயேசுவின் தாசரே,
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

**சரணங்கள்**

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னப்பாலர் பாடினார்,
அன்று போல இன்று நாமும் அன்பாய்த் துதி பாடுவோம்.
- ஓசன்னா

2. சின்ன மறி மீதில் ஏறி, அன்பர் பவனி போகிறார்;
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்.
- ஓசன்னா

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்,
பாசமுள்ள இயேசையா பவனியாகப் போகிறார்.
- ஓசன்னா

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்,
ஜாலர் வீணையோடு பாடித் தாளை முத்தி செய்குவோம்.
- ஓசன்னா

## 16.

**யமுனாகல்யாணி** **ரூபகதாளம்**

**பல்லவி**

பவனி செல்கின்றார் இராஜா - நாம்
பாடிப் புகழ்வோம், நேசா! .

**அனுபல்லவி**

அவனி தனிலே மறிமேல் ஏறி
ஆனந்தம், பரமானந்தம் - பவனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1. எருசலேமின் பதியே - சுரர்
கரிசனையுள்ள நிதியே!
அருகில் நின்ற அனைவர் போற்றும்
அரசே, எங்கள் சிரசே. - பவனி

2. பன்னிரண்டு சீஷர் சென்று - நின்று
பாங்காய் வஸ்திரம் விரிக்க,
நன்னயம் சேர் மனுவின் சேனை
நாத கீதம், ஓத - பவனி

3. குருத்தோலைகள் பிடிக்க, - பாலர்
கும்புகும்பாகவே நடிக்க,
பெருத்த தொனியாய் ஓசன்னா வென்று
போற்ற, மனம் தேற்ற. - பவனி.



## 17.

செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

பாரீர் ! கெத்சமனே பூங்காவிலென் நேசரையே,
பாவியெனக்காய் வேண்டுதல் செய்திடும் சத்தம்
தொனித்திடுதே.

சரணங்கள்

1. தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன் படும் பாடுகள் எனக்காயே
- பாரீர்

2. அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியுமும் சித்தம் செய்ய என்னை தத்தம் செய்தேன்
என்றாரே - பாரீர்.

3. இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவுமே நனைந்தே
இம்மானுவேலன் உள்ளமுருகியே வேண்டுதல்
செய்தனரே - பாரீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மும்முறை தரைமீதே தாங்கொண்ணா வேதனையால்
முன்னர் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே வாதகர்
மீட்புறவே - பாரீர்

5. அன்பின் அருள் மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்பவேளையில் தேற்றுவாரின்றியே நொந்து
அலறுகின்றார் - பாரீர்.

6. என்னையும் தம்மைப்போல மாற்றும் இம்மாநேசத்தை
எண்ணியெண்ணியே உள்ளம் கனிந்து நான் என்றும்
புகழ்ந்திடுவேன் - பாரீர்.


## 18.

Rock of ages cleft for me
Redhead 75



1. உடைபட்ட மலையே,
புகலிடந் தாருமே;
பக்கம் பட்ட காயமும்,
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவ தோஷம் யாவையும்,
நீக்கும்படி அருளும்.

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும்
தொய்யாத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே,
நீரே மீட்பர் இயேசுவே,
செந்நீர்பட்ட சிலுவை
சேருவேன் என் தஞ்சத்தை.



3. நிழல் நேரிவ் வாழ்விலே
கண்ணை மூடுஞ் சாவிலே
இகம் விட்டுப் பரத்தில்,
நடுத்தீர்வைத் தினத்தில்
உடைபட்ட மலையே,
புகலிடந் தாருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19.

இராகம் : ஜன்னியம் தாளம்: ஏகம்

### கண்ணிகள்

1. வருத்தப்படுவோர்க்கும் பாரம் சுமப்பவர்க்கும்
ஆதரவாய் உள்ளோனே, ஐயாவே இயேசு நாதா;
உலக மெனை வதைக்க அலகை யெனைத் தொடர
சிலுவையடியில் வீழ்ந்தேன், இரட்சகா இயேசு நாதா.

2. செய்வதிதென்றறியா திவர் செய்பிழை மன்னித்திடும்
அப்பா பிதாவே யென்றாய், இரட்சகா இயேசு நாதா;
கள்ளமில்லாத கள்வன் மெல்ல செபித்ததுவும்
இன்றே பரதீசென்றாய், இரட்சகா இயேசுநாதா.



3. தாயே அதோ உன்மகன்; யோவான் இதோ உன்
அன்னை;
தாய்போல் அணைப்பாய் என்றாய் இரட்சகா இ
நாதா;
என்தேவனே தேவனே, என்னைக் கைவிட்டீரோ
என்றேங்கி நைந்தழுதாய், இரட்சகா இயேசு நாதா.

4. முள்ளாணி வெயில் சிந்தை நைய உனைவதைக்க
தாக மெனக்கு என்றாய், இரட்சகா இயேசு நாதா;
தொல்வினை தீர்க்கும் இரட்சை நல் நிறைவேறிய பின்
எல்லாம் முடிந்த தென்றாய், இரட்சகா இயேசு நாதா.

5. சித்த முவந்திச்சணம் ஒப்பித்தேன் உன் கரத்தில்
அப்பா என் ஆவி என்றாய், இரட்சகா இயேசுநாதா;
இரத்தத்தில் மூழ்கி நின்றேன் பித்தன் உயிர்
பிழைத்தேன்,
நித்தம் உம்தொண்டு செய்வேன், இரட்சகா இயேசு
நாதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20.

குரஞ்சி ஏகதாளம்

1. தூதர் வான சேனை பாடும் காலையான நேரம்
ஆவியோ டுயிர்த்தருளும் ஆன கர்த்தன் வாழ்க!
தேவ குமாரனாய் சாவையும் வென்றே
மாநிலத்தின் விண்ணமுதம் ஆன கர்த்தன் வாழ்க!

2. பாவ சாபம் யாவும் போக தேவ சேனை வாழ்த்த
ஆவியோ டெழுந்தருளும் ஆன கர்த்தன் வாழ்க !
மாமரி சேயனாய் வானிலம் சென்றே
பாவிகளுக் கன்புமழை யான கர்த்தன் வாழ்க!

3. கான கீதம் தூதர் பாட காவலாளர் ஓட
வானமே லெழுந்த குரு வான கர்த்தன் வாழ்க!
தூதரும் கூறவே மாதர்கள் கண்டார்
தூயவருக் கின்பநிலை யான கர்த்தன் வாழ்க!

4. ஆவியான தீயின் நாவு மேவி சீஷர் ஏத்த
தேவனா யிறங்கி வரும் இயேசு கர்த்தன் வாழ்க!
மாசபை ஆயனாய் மானிடர்க் கென்றே
பாத கருக் கின்பநிழல் இயேசு கர்த்தன் வாழ்க!



## 21.

இராகம்: நரரோசு தாளம்: ஆதி

பல்லவி

கீதம், கீதம் ஜெய, ஜெய கீதம்
கைகொட்டிப்பாடிடுவோம்;
இயேசு இராஜன் உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1. பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் - அங்கு
போட்ட முத்திரைக் காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதி முன் - ஆ, ஆ, கீதம்

2. வேண்டாம், வேண்டாம், அழுதிட வேண்டாம்;
ஓடி உரைத்திடுங்கள் - தாம்
கூறின மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு - ஆ, ஆ, கீதம்

3. அன்னா, காய்பா, ஆசாரியர் சங்கம்
அதிரிடி கொள்ளுது பார் - இன்னா
பூதக்கணங்கள் இடி, ஒலி கண்டு
பயந்து நடுங்குகின்றார் - ஆ, ஆ, கீதம்



4. உலகினில் பெரியோர் மரித்தவரெல்லாம்
உயிர்த்தெழவே இல்லை;
உன்னதர் இயேசு கிறிஸ்து மாத்திரம்
உயிர்த்தின்றும் ஜீவிக்கின்றார் - ஆ, ஆ, கீதம்

5. கஸ்டங்கள், மாறும் கண்ணீர் நீங்கும்
இஸ்டமாய் வேலை செய்வோம் - நாம்
துஸ்ட உலகில் உயிர்த்த நம் நாதரால்
சிஸ்டராய்ப் போர் புரிவோம் - ஆ, ஆ, கீதம்

## 22.

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான் - உலகமுய்யக்
கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான்.

அனுபல்லவி

சித்த முவந்து தூதர் அத்தன் பதம் துதிக்க
எத்தினமு மலகை மெத்த மனம் வருந்த - கர்த்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

1. நித்திய சீவ பதத்தை - எவரும் பெற்று
மெத்து மானந்த மடைய
பக்த ருவந்து பல அர்ச்சனைகள் புரிய
உத்தமர் களாயுலகுற்ற சீடர் பொருந்த - கர்த்தாதி.

2. சாவின் கூரையும் முறித்து - சகல பவ
நோயின் வேரையும்அறுத்து
ஆவி தணிந்துலக வாசைகளி லுழன்றோர்
மேவிப் பரன் மெய் வழி தாவிக் கதியடைய - கர்த்தாதி.

3. வெற்றிக் கொடியைப் பிடிப்போம் - தினமும் பரன்
நற்று தியையே நவில்வோம் ;
பற்றி யாவு மறுத்துக் குற்றமகற்றி வாழ
முற்றுங் கருணை செய்த கொற்றவன் இயேசுபிரான் -
கர்த்தாதி

## 23.

### Jesus Christ is ris'n today
### Easter Hymn 7,7,7,7 With Allelujahs

1. இன்று கிறிஸ்து எழுந்தார்; அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்; அல்லேலூயா!
சிலுவையில் மாண்டவர்; அல்லேலூயா!
மோட்சத்தை திறந்தவர்; அல்லேலூயா!

2. அவர் வெற்றி கூறுவோம் ;
தோத்திரப் பாட்டுப் பாடுவோம்;
இயேசு தாழ்ந்துயர்ந்தாரே;
வான இராசா அவரே;

3. பாடனுபவித்தவர்;
இரட்சிப்புக்குக் காரணர்;
விண்ணின் வேந்தன் ஆயினார்;
தூதர் பாட்டைக் கேட்கிறார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24.

## சங்கீதம் 23

### பல்லவி



கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறாரே,
தாழ்ச்சி அடையேன் என்றுமே.

### அனுபல்லவி

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்.

### சரணங்கள்

1. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிரப்புகிறார்;
மகிமையின் நாமத்தின் நிமித்தம் அவர்தம்
நீதியின் பாதையில் நடத்துகிறார். - கர்த்தர்

2. மரணப் பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மா பெரும் தீங்குக்கும் அஞ்சேன் ;
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே அவர்
கோலும் தடியும் என்னைத் தேற்றும். - கர்த்தர்

3. சத்துருக்கள் முன்பின் எனக்காக
பந்தியொன் றாயத்தம் செய்தார்;
என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து என்
பாத்திரம் நிரம்பி வழியச் செய்தார். - கர்த்தர்

4. ஜீவன் என்னில் உள்ள காலம் வரை
நன்மை கிருபை தொடரும் ;
கர்த்தரின் வீட்டிலே களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன். - கர்த்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25.

சங்கராபரணம் ஆதிதாளம்

### பல்லவி

எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே
தொல்லை மிகு மிவ்வுலகில் எல்லாம் இயேசுவே.

### சரணங்கள்

1. ஆயனும், சகாயனும், நேயனு முபாயனும்,
நாயனு மெனக்கன்பான ஞான மணவாளனும் - எல்

2. தந்தை, தாயினம், சனம், பந்துள்ளோர், சிநேகிதர்
சந்தோட சகலயோக சம்பூரண பாக்கியமும் - எல்

3. கவலையி லாறுதலும் கங்குலிலென் சோதியும்,
கஷ்ட நோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔஷதமும் - எல்

4. போதக பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும் - எல்

5. அணியு மாபரணமும், ஆஸ்தியும் சம்பாத்யமும்,
பிணையாளியும், மீட்பரும், என்பிரிய மத்தியஸ்தனும் - எல்

6. ஆன ஜீவ அப்பமும், ஆவலுமென் காவலும்,
ஞானகீதமும், களிப்பும், நாட்டமும், கொண்டாட்டமும் - எல்

## 26.



1. காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே;
அல்லேலூயா பாடி பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவி


நம்பிவா இயேசுவை, இயேசுவை நம்பி வா
நம்பினேன் இயேசுவை இயேசுவை நம்பினேன்.

2. நிந்தனைகள் போராட்டம் வந்தாலும்
நீதியின் தேவன் தாங்கினாரே;
தேவ ஆவி என்னில் அமர
நேசருக்காய் ஜீவித்திடுவேன். - நம்பிவா

3. கன்மலைகள் நொறுங்கும் படியாய்
கர்த்தர் என்னைக் கரம் பிடித்தார்;
காத்திருந்து பெலனடைந்து
கழுகுபோல் நான் எழும்பிடுவேன். - நம்பிவா

## 27.

## Thou, Shepherd of Israel



1. என் ஆத்தும நேச மேய்ப்பரே!
என் உள்ளத்தின் ஆனந்தமே !
இன்னும் உம்மைக் கிட்டிச்சேர நான்
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்.

பல்லவி : பேசும், பேசும், செபம் செய்யும் போது;
ஆண்டவா! பிரியமானதை
இப்போ காட்டும் செய்ய ஆயத்தம்.

2. மெய் மீட்பரைக் கீழ்ப்படிவோர்,
தம் ஆத்துமத்தைத் தேற்றும் இடம்,
அடியேனும் பெற அருள்வீர்;
அப்பனே, விண்ணப்பம் கேட்டிடும்.



3. பாவிகளுக்குமது அன்பை,
என் நடையாற் காட்டச் செய்யும் ;
கல்வாரி ஆவியால் உள்ளத்தை
போரில் வெல்ல அபிஷேகியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. என் ஜீவிய நாட்களெல்லாம,
நீர் சென்ற பாதையே செல்வேன்;
ஆசித்து ஈகிறேன் என்னெல்லாம்
மீட்பரே, வல்லமை தந்திடும்.

## 28.

## I am so glad that our Father in Heaven

1. வான பிதா தந்த வேதத்திலே
நான் மகிழ்வேன் அன்பு சொல்லுகிறார்;
விவிலிய ஆச்சரியம் யாவினுள்ளே
ஆச்சரியம் இயேசென்னை நேசிக்கிறார்.



பல்லவி : ஆனந்தம் இயேசு நேசிக்கிறார்;
நேசிக்கிறார், நேசிக்கிறார்;
ஆனந்தம் இயேசு நேசிக்கிறார்,
நேசிக்கிறார்; என்னையும்.

2. நான் மறந்தோடினும் நேசித்தென்னை
சென்ற இடம் வந்து தேடுகிறார்;
மீண்டவர் கையினுள் ஓடத் தன்னை
தந்த அந்நேசத்தால் நேசிக்கிறார்.



3. நேசிக்கிறார் நானும் நேசிக்கிறேன்
மீட்க வந்தாத்துமம் நேசிக்கிறார்;
சாவு மரத்தில் அந்நேசங் கண்டேன்
நிச்சயம் இயேசென்னை நேசிக்கிறார்.

4. எவ்விதம் நீ அறிவாயென்கிலோ
இயேசுவுக்குத் தோத்திரம் நன் கறிவேன்;
தேவ சுத்தாவி என் ஆவியிலோ
சாட்சி என் இயேசென்னை நேசிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நிச்சயத்தால் இன்ப ஓய்வு பெற்றேன்
நம்பும் என் இயேசென்னை வாழ்விக்கிறார்;
சாத்தான் நில்லா தஞ்சி ஓடச்கண்டேன்
நான் சொல்ல இயேசென்னை நேசிக்கிறார்.


## 29.

## Give, Said the little stream

1. செய் என்று சிற்றாறு,
செய், நீ செய; தர்மஞ்செய்;
செய் என்று சிற்றாறு
இரையும் சத்தம் நீ கேள்;
சிறு ஆறாம் என்செயல் நீ பாரு,
செய் நீ செய் தர்மஞ்செய்
சிறு ஆறாம் என் செயல் நீ பாரு,
செழிப்பிப்பேன் நாடுகள்.

பல்லவி : பாடிப்பாடி நாளெல்லாம்
செய்வையாம் நீ செய்வையாம்
பாடிப் பாடி நாளெல்லாம்
தர்மம் செய்வையாம்.

2. செய் என்று தூற்றலும்,
செய், நீ செய், தர்மஞ்செய்;
செய் என்று தூற்றலும்
இரையும் சத்தம் நீ கேள் ;
பூவும் புல்லும் என்னால் மலரும்
செய், நீ செய், தர்மஞ் செய்;
பூவும் புல்லும் என்னால் மலரும்
செழிப்பிப்பேன் சோலைகள்.



3. செய் என்று மல்லிகை
செய், நீ செய், தர்மஞ் செய்;
செய் என்று மல்லிகை
வீசும் வாசம் நீ பார்;
விருப்பம் கொள்வார் முகர என்னை
செய், நீ செய், தர்மஞ்செய்;
சலம் புஷ்பம் போல் களிப்பாய்
மணம் என்பாரே மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. செய் இயேசுக்காகச் செய்

செய், நீ செய், தர்மஞ் செய் ;
செய் இயேசுக்காகச் செய்

எவரென்றாலும் நீ செய் ;
சலம் பஷ்பம் போல் களிப்பாய்
செய், நீ செய், தர்மஞ்செய்
விருப்பம் கொள்வார் முகர என்னை
கிறிஸ்தின் நிமித்தியம் செய்.

# 30.

## Hear the pennies dropping 5s, 5s With refrain

1. தர்மக் காசைப் பாரும்

விழும் ஓசை கேள்;
இயேசுவுக்கு யாவும்
நேசமாயீவோம்.

பல்லவி

ஓசை, ஓசை, ஓசை, ஓசை
காசின் ஓசை கேள்
இயேசுவுக்கு யாவும்
நேசமாயீவோம்.



2. கிறியோர் நமக்கு
செம்பு பொக்கிஷம்,
பெரியோ ரானாலோ
ஈவோம் கனகம். - ஓசை

3. எங்கள் சொந்தக் காசை
இயேசு நாதர்க்கே
தந்தோம் நல் உதார
சிந்தையோடுமே. - ஓசை

4. சிறியோர் ஈந்ததை

ஏற்றுக்கொள்ளுமே;
சிறிதான விதை
சித்தியாகுமே. - ஓசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31.


## Eudokia

65,65



1. பாலர் பாடும் போது
தேவன் கேட்கிறார்,
தம்மை வாழ்த்தும் போது
நன்றாய் மெச்சுவார்.

2. பாலரின் செபத்தை
ஏற்றுக்கொள்ளுவார்,
மேலான பட்சத்தை
என்றும் காட்டுவார்.



3. பாலரின் முகத்தை
உற்றுப் பார்க்கிறார்,
தமது சாயலை
அங்கே காண்கிறார்.

4. பாலரின் இன்பத்தைத்
தேடக் காக்கிறார்,
வற்றாத செல்வத்தை
மேலுங் கூட்டுவார்.

5. பாலரின் பூரிப்பை
தேவன் ஏற்றுவார்,
நெஞ்சை வாட்டும் துன்பை
முற்றாய் மாற்றுவார்.

6. பாலரே, ஊக்கமாய்
தேவனை நம்பும்.
எப்போதும் பூரிப்பாய்
கர்த்தரைப் போற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


32.

## Jesus bids us Shine



1. இயேசு கற்பித்தார்
ஒளி வீசவே;
சிறு தீபம் போல
இருள் நீக்கவே;
அந்தகார லோகில்
ஒளி வீசுவோம் ;
அங்கும், இங்கும், எங்கும்
பிரகாசிப்போம்.

2. முதல் அவர்க்காய்
ஒளி வீசுவோம் ;
ஒளி மங்கிடாமல்
காத்துக் கொள்ளுவோம் ;
இயேசு நோக்கிப் பார்க்க
ஒளி வீசுவோம் ;
அங்கும், இங்கும், எங்கும்
பிரசாசிப்போம்.



3. பிறரின் நன்மைக்கும்
ஒளி வீசுவோம்;
உலகின் மா இருள்
நீக்க முயல்வோம்;
பாவம் சாபம் யாவும்
பறந்தோடிப்போம்;
அங்கும், இங்கும், எங்கும்
பிரகாசிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33.

குறிஞ்சி ஆதி தாளம்

1. துள்ளித் துள்ளிப் பாலனே,
பாடிப் பாடி ஓடியே,
இயேசு வண்டை சேரலாம்
பாலர் நேசர் அவர் தாம்

2. பெத்லகேமில் பிறந்தார்,
பெற்றார் தந்தைக் கமைந்தார்,
கோபம், வஞ்சம், தூர்க்குணம்
அவரிடமில்லையாம்.

3. சிறு பிள்ளை நீயும் வா,
நெஞ்சை இயேசுவுக்குத் தா,
அவர் கையில் ஏந்துவார்
ஆசீர்வாதம் தருவார்



4. வாரும் சிறு பாலரே
பயமில்லை நேசரே;
துன்பம் துக்கம் நீக்குவார்
கண்ணீர் முற்றும் துடைப்பார்.

5. பொற் கிரீடம் அவரே,
சூட்டுவார் என் தோழரே;
தெய்வ தூதரோடேயும்
கீதம் சொல்வோம் என்றைக்கும்.

## 34.

சங்கராபரணம் ஆதிதாளம்

1. பால்ய வீரர், பால்யவீரர், பால்ய வீரரே
பால்ய வீரர் நாங்கள் கூடி யுத்தம் புரிவோமே.

2. நீதிக்கவசம், சத்தியக்கச்சை, வசனப்பட்டயமும்
விசுவாசக் கேடயமும் விரும்பிப் பிடிப்போமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3. அட்டதிக்கும் கட்டியாளும் கெட்ட தீமைகளும்
விட்டகன்று ஓட்டமெடுக்க யுத்தம் புரிவோமே.

4. மாயலோகம் தந்திரப் பசாசு, நேய மாம்சமும்
மனுஷன் கீழாய் சேவை செய்ய மற்போர் புரிவோமே.

5. இயேசு ராஜன் தேசமெங்கும் ஆள உள்ளத்தில்
நேசவீரர் நாங்கள் யாரும் யுத்தம் புரிவோமே.

## 35.

### Sound the battle Cry



1. வீர தீரமாய்
நேரும் சீருமாய்
நின்று ஏகமாய்
போர் செய்வோம் ;
பயமின்றியும்,
பின் வாங்காமலும்
கீதம் பாடியும்
முன் செல்லுவோம்- சோம்பும்

பல்லவி:

சோம்பும், சோர்வும்
நீக்கி, வீரராக
யாரும் வாரும்,
யுத்தம் பண்ணுவோம்.
செல்லும், வெல்லும்,
ஆரவாரமாக
இயேசுவையே நம்பிப் போகிறோம். - சோம்பும்

2. கொடி ஏற்றுவோம்,
எக்காளம் ஊதுவோம்,
வாளும் வீசுவோம்
போர்க்கோலமாய் ;
கர்த்தர் தாங்குவார்
கூடப் போகிறார்,
வெற்றி சிறப்பார்
கெம்பீரமாய். - சோம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3. சேனைக் கர்த்தரே,
இயேசு நாதரே,
தேவரீரையே
தோத்திரிப்போம்.
உம்மால் வல்லமை,
உம்மால் மகிமை,
உம்மால் வெற்றியைக்
கண்டடைவோம். - சோம்பும்

## Choruses...... பல்லவிகள்

1. கடவுள் அன்பாய் இருக்கிறார்
நேசிக்கிறார் நானும் நேசிக்கிறேன்

God is love and He loves me
He loves me, and I love Him

2. கர்த்தர் எந்தன் மேய்ப்பர்
அவரோடென்றும் நடப்பேன்
அமர்ந்த தண்ணீரண்டை
அவரோடென்றும் நடப்பேன்
என்றும் - என்றும்
அவரோடென்றும் நடப்பேன்



The Lord is my shepherd
I' ll walk with Him always
He leads me by the waters
I' ll walk with Him always
Always – Always
I' ll walk with Him always.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

1. கடவுள் நல்லவர் (3)
அவர் எனக்கு நல்லவர்



God is so good (3)
He's so good to me.

2. அவரை நேசிக்கிறேன் (3)
அவர் எனக்கு நல்லவர்
I love Him so (3)
He's so good to me

3. ஜெபத்தைக் கேட்கிறார் (3)
அவர் எனக்கு நல்லவர்



God answers prayer (3)
He's so good to me

4.

(1) அவர் அற்புதமானவரே (2)
அவர் சிங்கத்தின் வாயைக் கட்டினாரே
அவர் அற்புதமானவரே


(2) அவர் உன்னதமானவரே (2)
அவர் காற்றையும் கடலையும் அமர்த்தினாரே
அவர் உன்னதமானவரே

5. அற்புதர், அற்புதர், அற்புதர், அற்புதர்!
அற்புதர், அல்லவோ என் இயேசு.
கண்டோம், கேள்விப்பட்டோம்,
வேதத்தில் வாசிக்கிறோம்
அற்புதர் அல்லவோ என் இயேசு

wonderful, Wonderful, Wonderful, Wonderful !
Wonderful, wonderful is my Jesus.
Seen Him, heard Him,
Read of Him in the Bible
Wonderful, wonderful is my Jesus.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. என்னுள்ளத்தில், என்னுள்ளத்தில்,
என்னுள்ளத்தில் வாரும் இயேசையா
இன்றே வாரும் - தங்க வாரும்,
என்னுள்ளத்தில் வாரும் இயேசையா



Into my heart, into my heart
Come into my heart Lord Jesus.
Come in today – come in to stay
Come into my heart Lord Jesus

7.

(1) இயேசப்பா, நான் உமது பிள்ளையே (2)
என்னை நீர் என்றும் தூய்மைப்படுத்தி வருகிறீர்
இயேசப்பா, நான் உமது பிள்ளையே.

I am your child, Lord Jesus, I am your child (2)
Everyday, every hour
I can feel your cleansing power
I am your child, Lord Jesus, I am your child.

(2) இயேசப்பா, என் கரத்தைப் பிடித்திடும் (2)
என்னை நீர் என்றும் தூய்மைப்படுத்தி வருகிறீர்
இயேசப்பா, என் கரத்தைப் பிடித்திடும்

Hold my hand, Lord Jesus hold my hand (2)
Everyday, every hour
I can feel your cleansing power
Hold my hand, Lord Jesus, hold my hand

(3) இயேசப்பா என்னை நடத்திடும் (2)
என்னை நீர் என்றும் தூய்மைப்படுத்தி வருகிறீர்
இயேசப்பா, என்னை நடத்திடும்

Take me through, Lord Jesus take me through (2)
Everyday, every hour

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I can feel your cleansing power
Take me through, Lord Jesus take me through.

8. கர்த்தருக்குள் எப்பொழுதும்
சந்தோஷமாய் இருங்கள் ;
சந்தோஷமாய்,
சந்தோஷமாய் இருங்கள்;
கர்த்தருக்குள் எப்பொழுதும்
சந்தோஷமாய் இருங்கள்.



Rejoice in the Lord always
And again I say rejoice
Rejoice, Rejoice
And again I say rejoice
Reoice in the Lord always
And again I say rejoice

9. இயேசுக் கிறிஸ்து மாறாதவரே
மாறாதவரே - மாறாதவரே
இயேசுக் கிறிஸ்து என்றும் மாறாதவரே
நித்தியம் நித்தியமாய்
அல்லேலூயா அல்லேலூயா .... அல்லேலூயா - அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா - அல்லேலூயா

10. வல்லமை உண்டு - உண்டு
அற்புத வல்லமை
இயேசுவின் - இரத்தத்தில்
வல்லமை உண்டு - உண்டு
அற்புத வல்லமை
இயேசுவின் திரு இரத்தத்தில்

There is power – power
Wonder working power
In the blood - of the lamb
There is power – power
wonder working power
In the precious blood of the lamb.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இந்நாளையே - இந்நாளையே
கர்த்தர் படைத்தார் - கர்த்தர் படைத்தார்
களிகூருவோம் - களிகூருவோம்
மகிழ் கொண்டாடுவோம் (2)
இந்நாளையே கர்த்தர் படைத்தார்
களிகூருவோம் - மகிழ்கொண்டாடுவோம்
இந்நாளையே - இந்நாளையே
கர்த்தர் படைத்தார்

This is the day – this is the day
That the Lord has made (2)
We will rejoice – we will rejoice
And be glad in it (2)
This is the day that the Lord has made
We will rejoice and be glad in it
This is the day – this is the day
That the Lord has made.

12.

(1) என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ ? (2)
என் இயேசுவால் ஆகாதது (2)
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ ?

Is there anything too hard for the Lord? (2)
Is there anything too hard ? (2)
Is there anything too hard for the Lord ?

(2) என் இயேசுவால் ஆகாததொன்றில்லை (2)
என் இயேசுவால் ஆகாதது (2)
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை.


No, nothing is too hard for the Lord. (2)
No, nothing is too hard (2)
No, nothing is too hard for the Lord.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஓ! என் இயேசுவைப்போல் ஆவதென் வாஞ்சை (2)
என்னுள்ளில், என்னுள்ளில் (2)
ஓ! என் இயேசுவைப்போல் ஆவதென் வாஞ்சை.

Oh! I want to be like Jesus in my heart (2)
In my heart, in my heart (2)
Oh! I want to be like Jesus in my heart.

14. ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு,
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ தேவனுக்கு மகிமை !
இயேசுவை நேசிக்கிறேன்
மென்மேலும் நேசிக்கிறேன்.
அக்கரையில் நான் நின்று அவரை,
என்றென்றும் வாழ்த்துவேன்.



Oh! glory to God, He has lifted me up
He has lifted me up I know.
He reached out His hand, and He lifted me up
And that's why I love Him so.
I love Him more and more (2)
And when I stand, upon the other shore,
I' ll praise Him more and more.

15. இயேசு வந்தார், என்னைக் கண்டார்,
ஜீவன் ஈந்தார், மீட்டுக் கொண்டார்.
அ .... அல்லேலூயா (4).



End

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org